## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.130/2016

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw/ Pw2 (Additional witness) |
| Name | : Venkatesan |
| Father/Husband's Name | : Veerapathiran |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.02.2026.

**Accused in judicial custody.**

**முதல் விசாரணை:**

நான் செங்கல்பட்டு நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.05.2016 அன்று செங்கல்பட்டு தாலுக்கா காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் தாமோதரன் தற்போது ஒரகடம் காவல்நிலையத்தில் பணியாற்றி வருவதால், அவரின் விசாரணை அணுகுமுறை எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் மேலும் ஆவணங்களின் அடிப்படையில் நான் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.05.2016 அன்று மேற்சொன்ன உதவி ஆய்வாளர் காவல்நிலைய பொறுப்பிலிருந்த போது, பிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய கு.எண். 215/2016 இதச பிரிவுகள் 294(பி), 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே **அதசா.ஆ2 மற்றும் அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அண்ணாதுரை மற்றும் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **அதசா.ஆ4 மற்றும் அதசா.ஆ5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை ஆகியோரை விசாரித்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ நடைபெற்றது உண்மை என்று தெரிய வந்ததின் பேரில், எதிரியை பிடிக்க புலன் வைத்ததில், 28.05.2016 அன்று காலை 7.00 மணியளவில் வித்யா சாகர் கல்லூரி மேம்பாலம் அருகே நின்று இருந்தவரை உரிய தகவலாளி அடையாளம் காட்ட, எதிரியை உரிய

காரணம் கூறி, கைது செய்தபோது, எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சிகள் மணிகண்டன் மற்றும் பவித்ரகுமார் என்பவர்களின் முன்னிலையில் பதிவு செய்து, அவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, கையொப்பம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசா.ஆ6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 41 செ.மீ நீளகொண்ட கத்தியை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, உரிய பாராவசம் ஒப்படைத்து, நீதிமன்ற காவலுக்குட்படுத்தியுள்ளார்.

பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 91 **அதசா.ஆ8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பொருள் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் தனது புலன் விசாரணையை முடித்து, எதிரி மீது மேற்சொன்ன பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை:**

நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். அசா.1 சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், அதன் பேரில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை விசாரணை செய்யாமல் சம்பவ இடம் செல்லாமல், சம்பவ இடத்தில் வைத்து ஆவணங்களை தயாரிக்காமல், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் வழக்கிற்கு கேற்ப பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில், எதிரி மீது தவறான வழக்கை பதிவு செய்து, தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.